**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 216/2015**
**நாள் 02/04/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சங்கர் | த/பெயர் – துரை |
| வயது – 54 | தொழில் – |
| விலாசம் – திருக்கழுகுன்றம் | |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இராமநாத குருக்கள் எனது தாத்தா ஆவார். மேற்படி ராமநாத குருக்களுக்கு பிரேமாவதி, விஜயலட்சுமி, பாக்கிய லட்சுமி என மூன்று மகள்கள். நான் பிரேமாவதியின் மகன். நான் அரசு பேருந்து ஓட்டுநராக வேலை பார்த்தேன். ராமநாத குருக்களுக்கு கோவிலை நிர்வாகம் செய்யும் உரிமை இந்து அறநிலைய துறை மூலம் கிடைக்கப்பட்டது என்றால் இல்லை பரம்பரையாக கிடைக்கப்பட்டது. 1981ல் இந்து அறநிலைய துறை ராமநாத குருக்கள் மேற்படி கோயிலை நிர்வாகிக்க உத்தரவிட்டது என்றால் சரிதான். இதற்கு முன்பு மேற்படி கோயிலை யார் நிர்வாகம் செய்தார்கள், எப்படி நிர்வாகம் செய்யவேண்டும் என்பது குறித்தான ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. சேகர் குருக்கள் மேற்படி கோயிலை நிர்வாகம் செய்ய அனுமதி கேட்டு இந்து அறநிலைய துறையில் மனு செய்ததில் எனது தாயார் மற்றும் அவரது சகோதரிகள் தரப்பினராக அழைத்து விசாரித்தனர் என்றால் சரிதான். அவ்வாறு விசாரிக்கப்பட்டதில் மேற்படி மூன்று பேரும் எங்களுக்கு மேற்படி கோயிலை நிர்வாகம் செய்யும் உரிமை

வேண்டியதில்லை என எழுத்து மூலம் எழுதி கொடுத்தனர் என்றால் அவ்வாறு கேள்விபட்டேன், ஆனால் எழுதி கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தாயாரும் அறங்காவலர் உாிமை வேண்டாம் என்று தான் முடிவு செய்தார். ஆனால், கிருபாணந்த குருக்கள் அறங்காவலர் உாிமை எனக்கு வேண்டும் என்று கேட்டார் என்றால் அந்த இடத்தில் நான் இல்லாததால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3. கிருபானந்த குருக்கள் அறங்காவலர் உாிமை கேட்டார் என்றாலும் அதன் அடிப்படையில் இந்து அறநிலைய துறை சேகர் குருக்களுடன் கிருபாணந்த குருக்களும் சேர்ந்து அறங்காவலராக இருக்கவேண்டும் என்று உரிமையளித்து உத்தரவிட்டது என்றால் அது பற்றி தெரியாது. உண்மையில் இராமநாத குருக்கள் கோயில் நிர்வாகம் செய்வது பொருத்து உயில் எழுதி வைத்திருந்தால் அறங்காவலர் விசாரணையின் போது, மேற்படி கோயிலை நிர்வாகம் செய்யும் உாிமையை விட்டு கொடுக்கிறீர்களா என்ற கேள்வியே எழுந்திருக்காது என்றும் எனவே இராமநாத குருக்கள் உயில் எழுதியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. உயிலினை இராமநாத குருக்கள் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு எழுதினார். இராமநாத குருக்கள் இறப்பிற்கு பிறகு தான் இந்து அறநிலைய துறையில் விசாரணைகள் நடைபெற்றது. சேகர் குருக்கள் மேற்படி விசாரணையில் இராமநாதகுருக்கள் உயில் எழுதிவைத்துள்ளதாக கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி கோயில் தொடர்பாக ஆவணம் இருப்பதாக சொன்னார். மேற்படி விவரம் எனது தாயார் கூறி தான் எனக்கு தெரியும்.

4. இராமநாத குருக்கள் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும் சேகர் குருக்கள் கோயிலின் மொத்த நிர்வாகத்தையும் கவனிக்கவேண்டும் என்பதற்காக அவருக்கு பௌவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**